**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

OS .No.49/2024

தேதி: 05.06.2025

**அ.சா.1– தியாகராஜன், த/பெ.துரைசாமி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. தாவா வழக்கு சொத்து பிரதிவாதிகளின் குடும்பச் சொத்து என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தாகும். தாவா சொத்தை காசிராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். காசிராஜன் தர்மராஜ் என்பவரிடம் கிரையம் வாங்கியதாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். காசிராஜன் தர்மராஜிடம் வாங்கிய சொத்தும் நான் காசிராஜனிடம் வாங்கிய சொத்தும் ஒரே சொத்தா என்றால் ஆமாம். நான் கிரையம் பெற்றதின் அடிப்படையில் கூட்டுப்பட்டாவில் என்னுடைய பெயரும் சேர்த்தேன் என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.1 காசிராஜன் தர்மராஜிடம் வாங்கிய கிரையப்பத்திரத்தின் சொத்துவிவரத்தில் குறிப்பாக நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கீத்துக்கொட்டை இருப்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை போட்டோ தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் சில்லி சிக்கன் கடை போட்டுள்ளதற்கு உணவு பாதுகாப்புத்துறையில் இருந்து சான்றிதழ் மற்றும் உரிமம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து பிரதிவாதிகள் மற்றும் தர்மராஜ் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப மூதாதையர் சொத்து என்றால் சரிதான்.

3. தர்மராஜன் பாகம் பிரித்து காசிராஜனுக்கு விற்றுள்ளார். தர்மராஜன் பாகம் பிரித்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கூட்டுக்குடும்ப சொத்தில் தாவா சொத்தானது குறிப்பாக தர்மராஜ் என்பவரின் அனுபவ பாத்தியத்தில் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காசிராஜன் கிரையம் பெற்ற சொத்து என்ன உரிமைகள் உள்ளதோ அதே உரிமைகள் தான் எனக்கும் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 புகைப்படம் யாரால் எப்பொழுது எடுக்கப்பட்டது என்ற விவரம் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகைப்படத்திற்குரிய இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(பி) சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் உள்ளதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரையப்பத்திரம், போட்டோ, கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளேன். எதிர்தரப்பினர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எத்தனை சென்ட் இடம் காசிராஜனுக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் 12 3/4 சென்ட் ஆகும். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 89 சென்ட் ஆகும் அதில் 3ம் பிரதிவாதி குமார் என்பவர் அவருடைய பாகத்தை விற்றுள்ளார். 3ம் பிரதிவாதி குமார் கூட்டுக்குடும்பச் சொத்தில் எந்த பாகத்தையும் பெறவும் இல்லை யாருக்கும் விற்கவும் இல்லை என்றால் சரியில்லை.

5. காசிராஜன் தர்மராஜிடம் கிரையம் பெறுவதற்கு முன்பாக 3ம் பிரதிவாதி அவருடைய பாகத்தை விற்றதாக நான் சொல்கிறேனா என்றால் சரிதான். குமார் அவருடைய பாகத்தை 3ம் நபருக்கு விற்பனை செய்த பத்திரம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில நான்கெல்லை குறிப்பிடாமல் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்து எப்பொழுதும் காசிராஜனுக்கும் எனக்கும் அனுபவ சுவாதீனத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் அனுபவத்தில் இருப்பதற்கு எந்த ஆவணமும் என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல.

6. பிரதிவாதிகள் கூட்டுப்பட்டாவில் எனது பெயர் சட்டப்படி நீக்க நடவடிக்கை எடுத்துவருகிறார்கள் அதனால் நான் தாவா சொத்தில் சட்டவிரோதமாக நுழைவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. காவல் துறையினர் மூலம் தாவா சொத்தில் நுழைவதற்கு முயற்சி செய்து முடியவில்லை என்பதால் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உளவடை செய்வதை தடுத்து நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல என்னுடைய நிலத்தை உழவதற்கு வந்தார்கள் அதற்காக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.6 புகார் மனு ரசீதில் எதிர்மனுதாரர்கள் மனுதாரர் நிலத்தில் உழுவு ஓட்டியதை மனுதாரர் கேட்க சென்ற போது எதிர்மனுதாரர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி அடித்து தகராறு செய்து மிரட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. புகாரில் குறிப்பிட்டுள்ள சம்பவத்தின் போது நான் அங்கில்லை என்றால் சரிதான் எனது அம்மா சொன்ன பிறகு நான் போய் பார்த்தேன். தாவா சொத்தில் எனக்கு எந்த வித உரிமையும் இல்லையென்றால் சரியல்ல. தர்மராஜ் காசிராஜனுக்கு விற்ற பத்திரத்தில் உள்ள சொத்து எனக்கு கிடைக்க

வேண்டுமென்றால் பாகப்பிரிவினை வழக்கு தான் தாக்கல் செய்யவேண்டும் இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உழுவதை நான் தான் தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரியுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.